DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 186/2022 Crime No. 17/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW8/LW13-ரகுநாதன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 18.06.2024 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1) நான் தற்போது சிவகிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 09.01.2022-ம் தேதியன்று மதியம் 15.10 மணிக்கு நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சக்திவேல் என்பவர் நிலைய அலுவலிலிருந்த போது பவானி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற பிரகாஷ் என்பவரது அசால்ட் இண்டிமேசனை பெற்று அங்கு சென்று மேற்படி பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண். 17/2022 இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(ii) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நிலைய உதவி ஆய்வாளர் கனகராஜ் என்பவர் மறு நாள் காலை 6.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகளான வெங்கடாசலம், வீரமணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) பின்னர் மேற்படி சாட்சிகள்முன்னிலையில் சம்பவ இடத்திலிருந்து முளைக்குச்சி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91-ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் பிரகாஷ், அம்மாசை, பவுனாயாள், ஆனந்தன், சுரேஷ், இந்திராணி, சண்முகம், வெங்கடாசலம், வீரமணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் எதிரிகள் மூவரும் மாண்பமை ஈரோடு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. 11.03.2022 தேதியன்று தொடர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்டபோது சம்பவ இடம் மாதிரி வரைபடத்துடன் ஒத்திருந்தால் புதிதாக எதுவும் தயாரிக்கவில்லை. சாட்சிகளை விசாரித்தபோது மேற்படி உதவியாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் புதிதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

3) 20.04.2022 தேதியன்று வாதிகளுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சுஷாநந்தனை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுகள் பெற்றேன். **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் முதல் தகவல் அறிகை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.. எனது புலன் விசாரணையை முடித்து 20.04.2024 தேதியன்று எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(ii) -ன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனது புலன் விசாரணையில் இந்த வழக்கின் இரு தரப்பினருக்கும் இடையே முன் விரோதம் இருந்ததை தெரிந்து கொண்டேன். நான் வரைந்த வரைபடத்தில் சான்று பொருள் கண்டெடுத்த குறிப்புகள் எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால், சரிதான். சம்பவயிடம் பொதுயிடம் அல்ல. நான் இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், வாதி எதிரிகள் மீது இருந்த குடும்ப பகையை மனதில் வைத்துக் கொண்டு அவருக்கு வேறு சம்பவத்தில் ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி எதிரிகள் மீது கொடுத்த பொய் புகாரை நான் சரிவர விசாரிக்காமல் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது ஒரு பொய்யான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. எனக்கு சம்பவயிடத்தில் அங்கிருந்து எடுக்கப்பட்ட சான்றுப் பொருளை யார் அடையாளம் காட்டினார்கள் என்று இறுதியறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல.